செய்தி வெளியீடு எண்: 010 நாள் : 07.01.2016

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஜனவரி 2016 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 09.01.2016 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப்பள்ளி, எண்.246, தங்கசாலை தெற்கு, சென்னை 600003. (தென்னக ரயில்வே அலுவலகம் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி, எண்.1, நைனியப்பன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600021, (பெரிய மார்க்கெட் எதிரில்) (உள்ளாரம்மன் கோயில் அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, எண்.26, குக்ஸ் ரோடு, பெரம்பூர், சென்னை 600 012, (பின்னி மில் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | கோட்டம் எண்.104சென்னை நடுநிலைப்பள்ளி, எண்.32, சுந்தரம் பிள்ளை தெரு, புரசைவாக்கம், சென்னை – 600 007. (கார்டன் மதார்ஸா டெக்ஸடைல்ஸ் பின்புறம்) |
| 5 | அம்பத்தூர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கள்ளிக்குப்பம் பாடசாலை தெரு, அம்பத்தூர், சென்னை–600 053, (கள்ளிக்குப்பம் நுழைவாயில் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | காமராஜ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, கதவு எண்.2, காமராஜ் ஸ்கூல் ரோடு, தணிகாசலம் நகர், பொன்னியம்மன்மேடு, சென்னை–600 110. (குமரன் நகர் பஸ் நிலையம் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | புனித அந்தோனியர் சமூக நலகூடம், கதவு எண்.52/10, மணலி புதுநகர், சென்னை– 600 103.(மணலி புதுநகர் பேருந்து நிலையம் அருகில்) |
| 8 | ஆவடி | ஆவடி பெருநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கோவில் பதாகை, ஆவடி, சென்னை – 600 062. (பள்ளி கொண்டம்மன் கோவில் தெரு) |
| 9 | தி.நகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண் 78, நியூ போக் ரோடு, கண்ணம்மாபேட்டை, தி.நகர், சென்னை–600 017. (கண்ணம்மாபேட்டை 5E பஸ் நிறுத்தம் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி, எண்:37, பாரதியார் தெரு, தரமணி, சென்னை–600 113. (தரமணி பேருந்து நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், சிவசங்கரன் தெரு, ஜமீன் பல்லாவரம், சென்னை–600 043 (பல்லாவரம் இரயில்வே ஸ்டேஷன் அருகில்) |
| 12 | தாம்பரம் | சமுதாய நல கூடம், வேங்கைவாசல் மெயின்ரோடு, வேங்கைவாசல் ஊராட்சி, சென்னை– 600 073, (ஐ.எம். கியர்ஸ் தனியார் கம்பெனி அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | 177வது வார்டு, செயற்பொறியாளர் அலுவலகம், பிருந்தாவன் நகர் பிரதான சாலை, ஆதம்பாக்கம், சென்னை–600 088. (பிருந்தாவன் நகர் பேருந்து நிறுத்தம் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | செயின்ட் ஜோசப் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலை பள்ளி, 31, வேப்பேரி நெடுஞ்சாலை, வேப்பேரி, சென்னை–7, (கால்நடை மருத்துவக் கல்லூரி எதிரில்) |
| 15 | சேப்பாக்கம் | மாநகராட்சி பழைய மண்டல அலுவலகம், வார்டு 116, கதவு எண்:2, டாக்டர் பெசண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை–5 (விவேகானந்தர் இல்லம் பேருந்துநிலையம் அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பெரும்பாக்கம், சென்னை–100, (பெரும்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில்) |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9